(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 262/2022 அ.சா.10

| | | |
|---|---|---|
| Name | : | திரு. காளிமுத்து |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11.08.2025.

(**A**5 – எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார் மற்ற எதிாகள் ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் கீரத்துரையில் குடியிருந்து வருகிறேன். என் அப்பா பெயர் திருக்கண்ணத்தேவர். மகாளிப்பட்டி ரயில்வே கேட் அருகே லோடுமேனாக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகள் யாரையும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசுத்தரப்பில் கோரிக்கை விடப்பட்டு, ஏற்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலிஸ் விசாரணையில் லோடு இறக்குவது சம்மந்தமாக வாழத்தோப்பு ஏரியாவிற்கு செல்வதாகவும் அங்கே கீரத்துரை மற்றும் நாகுப்பிள்ளை தோப்பை சேர்ந்த பிரபாகரன் என்ற சைனா பிரபாகரன், பாலமுருகன் (ஏ) மச்சபாலா மணிமாறன் (எ) புல்லட்டு மணி நெல்சன் , பாண்டி விஜய் (எ) பி.பி , மணிகண்டன் (எ) குலாபின் மணி, விக்னேஷ் குமார் (எ) வினேஷ் குமார், காளிதாஸ் விவேக் ஆகியோர்களை தெரியும் என்றும் அவர்கள் சபாரத்தினம் (எ) சபாவின் கூட்டாளிகள் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 03.05.2019 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் கீரத்துரை ரயில்வே கேட் தாண்டி பாம்பன் ரோட்டு பகுதியில் சிந்தாமணிரோட்டிற்கு சென்றுகொண்டிருந்ததாகவும் அப்போது மேற்சொன்ன எதிரிகள் அனைவரும் கூடி நின்று இன்னைக்கு தப்பவிட்டால் நமக்கு நல்ல வாய்ப்பு கிடைக்காது அதனால் பால்பாண்டியை இன்னைக்கே போட்டுவிடவேண்டியதுதான் என் பேசிக்கொண்டிருந்ததாகவும், நான் லோடு இறக்க சென்றுவிட்டதாகவும், அதன் பின் பால்பாண்டியை கொலை செய்தது பற்றி தெரியவந்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல.மேலே சொன்னவாறு காவல் துரை விசாரணையில் நான் சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளித்துளேன் என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- காளிமுத்து

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.